2019 ஜனவரி 5]

வள்ளியின் பெயரில் இருக்கிற எங்கள் வள்ளியூருக்கு அதனைத் தந்தால் பொருத்தமாக இருக்குமென்பதால், வள்ளியூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசின் முன்பாக சமர்ப்பிப்பதோடு, அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொடர்ந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரியானது எங்கெங்கு தேவைப்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, 16 கல்லூரிகளை வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் இந்தக் கல்வியாண்டிலேயே 5 கல்லூரிகளை தேவைப்படுகின்ற இடங்களில், மாணக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கின்ற இடங்களில் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே, வரும் கல்வியாண்டிலே அந்தப் பகுதி மாணாக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், அரசு அதனை அமைப்பது பற்றி பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

நூற்பாலை

***25107—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லையென்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய தொழிற்சாலைகள் இல்லாத ஒரு பின்தங்கிய பகுதியாக இருந்து வருகிறது. இப்பகுதியில் படித்த இளைஞர்களும், இதர தொழிலாளர்களும் தங்களுடைய வாழ்வாதாரத்தைக் கருதி, தமிழகத்திலுள்ள பல்வேறு பெருநகரங்களுக்கும், அண்டை மாநிலங்களுக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி விளைநிலங்களை உள்ளடக்கிய பகுதியாகும். வேளாண்மையை மட்டுமே நம்பி வாழும் இப்பகுதி விவசாயிகள் அதிகமான பரப்பளவில் பருத்தியை சாகுபடி செய்து வருகின்றனர். மாடப்பள்ளி உழவர் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகவும், அரசின் திருப்பத்தூர் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாகவும் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக அரசின் சார்பில் இங்கே பருத்தியைக் கொள்முதல் செய்து வருகின்றனர். எனவே, திருப்பத்தூரை மையமாகக் கொண்டு நூற்பாலை அமைக்கப்பட்டால், இப்பகுதி தொழிலாளர்களுக்கும், படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்குகின்ற விதமாக அமையும். மேலும், இது விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் இருக்குமென்பதால் இந்த அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.*

2019 ஜனவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையானது 1–11–1965 அன்று 30,240 கதிர்களுடன் வேலூர் மாவட்டம், அரியூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நூற்பாலை பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நஷ்டத்தில் செயல்பட்டு வந்ததால், 1–12–1997 முதல் செயலிழந்தது. ஆலையின் குவிந்த நஷ்டம் 35.32 கோடி ரூபாயாகும். இந்நூற்பாலையின் கடன் பொறுப்புகள் 38.97 கோடி ரூபாயாகும். இந்நூற்பாலையில் குவிந்த நஷ்டம் சொத்தின் மதிப்பைவிட அதிகமாகிவிட்ட காரணத்தால் ஆலையை மேற்கொண்டு இதற்குமேல் நடத்த முடியாது என்று முடிவு செய்து, அந்த ஆலையானது மூடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது விவசாயிகள் அந்தப் பகுதிகளில் பருத்தியை அதிகமாக உற்பத்தி செய்து வருகிறார்கள் என்று தெரிவித்தார். அதற்காகவாவது இந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள். தமிழகத்தில் பருத்தி 5 சதவிகிதம் மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியில் 95 சதவிகிதம் வெளி மாநிலங்களிலிருந்துதான் தருவிக்கப்படுகிறது. தமிழகத்தில் 5 சதவிகிதம் பருத்தி மட்டுமே உற்பத்தியாகிற காரணத்தினால்தான் இந்தத் தொழில் நலிவடைகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, 2.40 இலட்சம் கோடி ரூபாயை தமிழகத்தில் தொழில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யப் போவதாக அறிவித்தார். அதை நீங்களும் பாராட்டி, வரவேற்றீர்கள். அதனைத் தொடர்ந்து தற்போது மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறப் போவதாக அறிவிப்பு வந்தவண்ணம் உள்ளது. இந்த மாநாட்டின் வாயிலாக பின்தங்கிய நிலையிலும்,*

நலிவுற்ற பகுதியாகவும் இருக்கும் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நாளுக்கு நாள் நலிவுற்றுவரும், பருத்தியை உற்பத்தி செய்துவரும் விவசாயிகளை ஊக்குவித்து, பருத்தியை உற்பத்தி செய்யும்பொருட்டு, நூற்பாலை அமைத்திடவோ அல்லது துறை சார்ந்த வேறு தொழிற்சாலைகளை அமைத்திடவோ இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு தொழில் சார்ந்த தொழிற்சாலைகளை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இன்னொரு சமயத்தில், வேறு ஒரு கேள்வியின் மூலமாக இந்த அவையில் முன்வைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

ஆரம்ப சுகாதார நிலையம்

***37691—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஒன்றியம், பனையம்பள்ளி ஊராட்சி, பனையம்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,